25-08-2024 காலை முரளி ஓம் சாந்தி ''அவ்யக்த பாப்தாதா''

இன்று அன்புக்கடல் பாப்தாதா தன்னுடைய மிகவும் அன்பான, தேடிக் கண்டெடுக்கப்பட்ட செல்லமான இனிமையிலும் இனிமையான குழந்தைகளை சந்திப்பதற்காக வந்திருக்கின்றார் கள். நீங்கள் அனைவரும் கூட சந்திப்பை கொண்டாட வந்திருக்கின்றீர்கள் அல்லவா! ஓடோடி வந்திருக்கின்றீர்கள். பாப்தாதாவும் குழந்தைகளை சந்திப்பதற்காக ஓடோடி வந்திருக்கின்றார் கள். நீங்கள் அனைவரும் இந்த உலகத்தில் இருந்து வந்திருக்கின்றீர்கள் மற்றும் பாப்தாதா பரலோகம் மற்றும் சூட்சும உலகத்தில் இருந்து வந்திருக்கின்றார்கள். அனைவரையும் விட தூரத்தில் இருந்து யார் வந்திருக்கின்றார்கள்? யார் தூர தேசத்தில் இருப்பவர்? இரட்டை அயல்நாட்டினர் தூர தேசத்தினரா? இல்லை. அனைத்தையும் விட தூரத்திலும் தூரமான தூர தேசத்தில் இருப்பவர் தந்தையே ஆவார். பாப்தாதாவிற்கு இந்த முறை இரட்டை அயல் நாட்டினர் மற்றும் பாரதவாசி குழந்தைகளுடைய ஒரு விசயத்தைப் பற்றி மிகுந்த பெருமிதம் உள்ளது. எந்த விசயத்தில் பெருமிதம் உள்ளது? சொல்லுங்கள். எப்பேற்பட்ட சூழ்நிலையிலும் தந்தையை சந்திப்பதற்காக வந்து சேர்ந்துவிட்டீர்கள் என்று விசேஷமாக இரட்டை அயல்நாட்டு குழந்தைகளுடைய தைரியத்தைப் பார்த்து பாப்தாதாவிற்கு பெருமையாக உள்ளது. நாடகம் விளையாட்டையும் காண்பித்தது, ஆனால், தந்தை மற்றும் குழந்தைகளுடைய சந்திப்பை நாடகத்தாலும் தடுக்க முடியவில்லை. அப்பேற்பட்ட தைரியம் கொண்டிருக்கும் குழந்தைகள் மீது பாப்தாதா விசேஷமாக வரதானங்களின் மழை பொழிந்து கொண்டிருக்கின்றார்கள்.

இன்று இந்த நொடி, எந்தக் குழந்தை, எந்த வரதானத்தை விரும்பினாலும், அந்த வரதானம் கிடைக்கும். எளிதாகக் கிடைக்கும், ஆனால், இந்த வரதானத்தை தினமும் அமிர்தவேளை மற்றும் கர்மயோகி ஸ்திதியில் அடிக்கடி உள்ளத்தால் நினைவு செய்ய வேண்டும். உள்ளம் உடைந்து போகக் கூடாது. வரதானம் கிடைத்துள்ளது. எவ்வாறு ஸ்தூல கண்களின் நடுவில் நிரந்தரமாக புள்ளி ஜொலித்துக் கொண்டிருக்கிறது அல்லவா! அதுபோல் சதா கண்களில் புள்ளி பாபாவை நிறைத்து வைத்துக் கொள்ள வேண்டும். வைத்துக் கொள்ள முடியுமா அல்லது கடினமா? (சகஜம்) எவ்வாறு ஸ்தூல புள்ளி நிரந்தரமாக உள்ளதோ, அதுபோல் கண்களில் நிரந்தரமாக புள்ளியான தந்தையும் நிறைந்திருக்க வேண்டும். நிறைந்திருக்கின்றாரா? பொருந்தி விட்டாரா (ஃபிட் ஆகிவிட்டாரா)? வெளியே வந்து விடமாட்டார் அல்லவா? ஒருவேளை, கண்களில் நிரந்தரமாக புள்ளியான பாபா நிறைந்திருக்கின்றார் என்றால் வேறு எந்த பக்கமும் கண்கள் கவர்ச்சிக்கப்படாது. உழைப்பில் இருந்து விடுபட்டுவிடுவீர்கள். வேறு பக்கம் பார்வை போகவே போகாது. முற்றிலும் பாதுகாப்பானதாக ஆகிவிடும். என்ன நடந்தாலும் சரி, ஆனால், கண்களில் சதா புள்ளியான தந்தை நிறைந்திருக்க வேண்டும். சதா கண்களில் நிறைந்து இருப்பாரானால், உள்ளத்திலும் அவரே நிறைந்திருப்பார். எனவே, உள்ளத்தில் மற்றும் கண்களில் நிறைத்துக் கொள்வதற்கான விதி - தலைவரான பாப்தாதாவை திருப்திபடுத்துவது ஆகும். தலைவன் திருப்தியாக இருக்கின்றாரா? தலைவர் பாப்தாதா உங்களால் திருப்தியாக இருக் கின்றார் என்று நீங்கள் நினைக்கின்றீர்களா? எத்தனை சதவிகிதம் திருப்தியாக இருக்கின்றார்? (சிலர் 99 என்று கூறினார்கள், சிலர் 75 சதவிகிதம் என்று கூறினார்கள்) பாராட்டுகள். பாப்தாதாவை திருப்திபடுத்துவது மிகவும் சுலபமாகும். பாப்தாதாவை திருப்திபடுத்துவதற்கான எளிய சாதனம் உண்மையான உள்ளம் ஆகும். உண்மையான உள்ளத்தால் தலைவர் திருப்தி அடைகின்றார். ஒவ்வொரு கர்மத்திலும் உண்மையானவராக இருக்க

வேண்டும். உண்மை மகான் தன்மை ஆகும். யார் உண்மையான உள்ளம் உடையவர்களாக இருக்கின்றார்களோ, அவர்கள் சதா எண்ணம், பேச்சு மற்றும் கர்மத்தில், சம்பந்தம், தொடர்பில் இராஜ்யுக்தாக இருப்பார்கள் அதாவது இரகசியங்களைப் புரிந்து கொண்டிருப்பவர்களாக, நடப்பவர்களாக இருப்பார்கள். மேலும், நாம் எந்தளவு இராஜ்யுக்தாக இருக்கின்றோம் என்பதை கண்டறிவதற் கான அடையாளம் - ஒருவேளை, இரகசியத்தை அறிந்திருந்தால் அவர்களுக்கு ஒருபோதும் தன்னுடைய சுய ஸ்திதியில் கோபம் வராது, உள்ளம் உடைந்து போகமாட்டார்கள், மேலும், எண்ணத்திலும், விருத்தியாலும் (உணர்வாலும்), நினைவாலும், பார்வையினாலும் எவரையும் கோபப்படுத்தமாட்டார்கள். ஏனென்றால், அவர்கள் அனைவருடைய மற்றும் தன்னுடைய சமஸ்காரம் மற்றும் சுபாவத்தை அறிந்திருக்கக்கூடிய இராஜ்யுக்தாக இருப்பார்கள். எனவே, தந்தையை திருப்திபடுத்துவதற்கான விதி - இராஜ்யுக்த்தாக நடப்பது மற்றும் இராஜ்யுக்த் என்றால் தனக்குள்ளும் கோபம் வராது, பிறரையும் கோபப்படுத்தமாட்டார்கள்.

சதா நேரத்தின் அனுசாரம் தன்னுடைய மனம், புத்தியை கனவிலும் கூட சதா சுபமானதாக மற்றும் சுத்தமானதாக வைத்திடுங்கள். பாப்தாதா சக்திகளைக் கொடுக்கின்றார்கள், ஆனால், சமயத்தில் சக்தி பயன்படுவதில்லை என்று சில குழந்தைகள் உரையாடலில் கூறுகின்றார்கள். பாப்தாதா விசேஷமாக, அனைத்து குழந்தைகளினுடைய துணைவன் என்ற சம்பந்தத்தில், விசேஷமாக அப்படிப்பட்ட சமயத்தில் எக்ஸ்ட்ரா (அதிகப்படியான) உதவி செய்கின்றார்கள், ஏன்? குழந்தைகளை சம்பன்னம் ஆக்கி கூடவே அழைத்துச் செல்வதற்கு தந்தை பொறுப்பாளராக இருக்கின்றார். விசேஷமாக அப்படிப்பட்ட நேரத்தில் தந்தை தன்னுடைய பொறுப்பை நிறை வேற்றுகின்றார். ஆனால், அவ்வப்பொழுது குழந்தைகளுடைய மனதினுடைய கேட்சிங் பவரின் (கிரஹிக்கும் சக்தி) சுவிட்ச் ஆ∴ப் ஆகிறது என்றால் தந்தை என்ன செய்ய முடியும்? தந்தை பிறகும் சுவிட்சை ஆன் செய்வதற்கான முயற்சி செய்கின்றார், ஆனால், சமயம் ஆகிவிடுகிறது. ஆகையினால், பிறகு எப்பொழுது சுவிட்ச் ஆன் ஆகிறதோ, அப்பொழுது செய்ய விரும்ப வில்லை, ஆனால், நடந்துவிட்டது என்று கூறுகின்றார்கள். எனவே, சதா தன்னுடைய மனதின் கேட்சிங் பவர், இதை நீங்கள் டச்சிங் என்று கூறுகின்றீர்கள், அந்த டச்சிங் அல்லது கேட்சிங் பவரினுடைய சுவிட்சை ஆனில் வைத்திடுங்கள். மாயை ஆ∴ப் செய்வதற்கு முயற்சி செய் கின்றது, நொடியில் ஆ∴ப் செய்து சென்றுவிடுகிறது, ஆகையினால், எவ்வாறு சமயம் குறைந்து கொண்டே செல்லுமோ, இப்பொழுது இன்னும் குறையப் போகிறது. பயப்படவில்லை தானே? பாப்தாதா முன்பே கூறியிருக்கின்றார்கள் - நீங்கள் அனைவரும் ஏன் வருடத்தைக் கொண்டாடினீர்கள்? என்ன வருடத்தைக் கொண்டாடினீர்கள்? சமஸ்காரத்தினால் உலக மாற்றத்திற்கான வருடமாகக் கொண்டாடினீர்கள். பக்கா தானே! கொண்டாடினீர்கள் அல்லவா! அல்லது மறந்துவிட்டீர்களா? (கொண்டாடிக் கொண்டு இருக்கின்றோம்) எப்பொழுது குழந்தைகள் உலக மாற்றத்திற்கான எண்ணத்தை உறுதியாக செய்திருக்கின்றீர்களோ, அப்பொழுது இயற்கை யும் தந்தையிடம் கேட்கின்றது - சுத்தப்படுத்துவதற்கு நான் ஏற்பாடு செய்கின்றேன், ஆனால், சுத்தப்படுத்துவதற்கு யார் நிமித்தம் ஆனவர்களோ, அவர்கள் செய்யும்பொழுதே, செய்யலாமா அல்லது வேண்டாமா, சீக்கிரம் செய்ய வேண்டுமா அல்லது மெதுவாக செய்ய வேண்டுமா என்ற

யோசனையில் ஆழ்ந்துவிடுகின்றார்கள், தடுமாற்றத்தில் வந்துவிடுகின்றார்கள், இப்பொழுது நான் என்ன செய்யட்டும்! என்று இயற்கை கேட்கின்றது, பாப்தாதா இயற்கைக்கு என்ன பதில் அளிக்கட்டும்? இரட்டை அயல்நாட்டினர் சொல்லுங்கள் (கொஞ்சம் காத்திருக்கட்டும்) இது சரியான பதில் அல்ல. ஒருவேளை, இரட்டை அயல்நாட்டினர் காத்துக் கொண்டிருந்தால் பிறகு விமானம் கிடைக்காது. இப்பொழுது விமானம் கிடைத்துவிட்டது அல்லவா. விமானத்தில் தூங்கிக் கொண்டே வந்துவிட்டீர்கள் அல்லவா. ஓய்வாக வந்துவிட்டீர்கள் அல்லவா. முழு சபையிலும் யாருக்காவது வருவதில் கஷ்டம் ஏற்பட்டதா? கை உயர்த்துங்கள் (எங்களுடைய விமானம் ஒருமுறை திரும்ப சென்றுவிட்டது என்று ஒருவர் கூறினார்) ஆனாலும் சரியான நேரத்திற்கு வந்து சேர்ந்துவிட்டீர்கள். இது தைரியமான விசயம் ஆகும். கொஞ்சம் பயந்தவர்கள் அங்கேயே இருந்துவிட்டார்கள். நீங்கள் அனைவரும் சென்றே ஆகவேண்டும் என்ற உறுதியான எண்ணம் செய்தீர்கள், அதனால், வந்து சேர்ந்துவிட்டீர்கள். ஒருவருடைய விமானம் மட்டும் சென்றுவிட்டது, அவ்வளவுதானே. அதனால் ஒன்றும் இல்லை, பிறகு நல்லதாகக் கிடைக்கும். இதற்குப் பின்னரும் இயற்கையை சுத்தம் செய்பவர்களை யோசனையில் ஆழ்த்தாதீர்கள், ஏனெனில், ஸ்தாபனை செய்பவர்கள் இப்பொழுதும் கூட, என்ன செய்யட்டும், அப்படி செய்யட்டுமா, செய்ய வேண்டாமா? சரியாக இருக்குமா அல்லது சரியாக இருக்காதா? என்று அவ்வப்பொழுது யோசனையில் ஆழ்ந்துவிடுகின்றார்கள். ஆம் அல்லது இல்லை என்பது முற்றிலும் தெளிவாக இருக்க வேண்டும். இது சரியானது, இது தவறானது என்பது தெளிவாக இருக்க வேண்டும். நீங்கள் வருடத்தைக் கொண்டாடும் காரணத்தினால் இயற்கை அதனுடைய ஏற்பாடு செய்யும். இப்பொழுதும் செய்து கொண்டிருக்கின்றது. ஆனால், ஸ்தாபனைக்கு நிமித்தமாக ஆகியிருக்கும் ஆத்மாக்கள் இப்பொழுது எந்த விசயங்களிலும், அது சுயத்திற் காகவோ, அது பிறருக்காகவோ, யோசனையில் சமயத்தை செலவழிக்கக் கூடாது. ஒரு நொடியில் தெளிவான டச்சிங் ஏற்பட வேண்டும். புத்தியை ஈடுபடுத்துவதற்கு எவ்வளவு நேரம் ஆகின்றது? (ஒரு நொடி) எப்பொழுது நடைமுறை வாழ்க்கையில் புள்ளி வைக்கின்றீர்களோ, அப்பொழுது ஒரு வினாடி ஆகிறதா? எந்தவொரு விசயத்திலும் புள்ளி வைப்பதற்கு அல்லது புள்ளி ரூப ஸ்திதியில் நிலைப்பதற்கு ஒரு நொடி ஆகிறதா? ஏதாவது விசயம் உங்களுக்கு முன்னால் வந்துவிட்டது என்று வைத்துக்கொள்ளுங்கள், அதற்கு புள்ளி வைப்பதற்கு ஒரு வினாடி ஆகிறதா? பாண்டவர்களுக்கு ஒரு நொடி ஆகிறதா? (அவ்வப்பொழுது) பாண்டவர்களுக்கு புள்ளி வைப்பதற்கு நேரம் எடுக்கிறது, ஒரு நொடி ஆகின்றது என்றா சொல்கின்றீர்கள்? சக்தி களுக்குள் சக்தி இருக்கிறதா? (பாண்டவர்கள் சத்தியத்தைக் கூறுகின்றார்கள்) இல்லை, இருவரும் சத்தியமானவர்களே. ஏனெனில், அவர்களுக்கு புள்ளி இப்பொழுது வைக்க முடிந்திருக்கும். உங்களுக்கு இப்பொழுது வைக்கமுடியாமல் போயிருக்கலாம். ஆகையினால், வித்தியாசம் ஏற்பட்டுவிட்டது. மற்றபடி அனைவருமே சத்தியானவர்களே. சத்தியமான உள்ளம் உடையவர்களாக இருக்கின்றீர்கள். நல்லது.

ஹால் நிறைந்து இருக்கின்றது (கீழே பாண்டவபவனிலும் கூட அமர்ந்திருக்கின்றார்கள்) அமர்ந்திருப்பதோ கீழே, ஆனால், பாப்தாதாவிற்கு முன்னால் இருக்கின்றார்கள். உள்நாடு, வெளிநாட்டில் பாப்தாதா மதுபனில் வந்துவிட்டார்கள் என்ற இதே நினைவில் அமர்ந்திருக் கின்றார்கள். அவரவர்

தொலைநோக்குப் பார்வை மூலம், தொலைநோக்கி (டெலஸ்கோப்) மூலம் பார்த்துக் கொண்டு இருக்கின்றார்கள். தூரத்தில் அமர்ந்திருந்தாலும் கூட மனதால் மதுபனில் அமர்ந்திருக்கின்றார்கள் என்பதால் அவர்களும் இப்பொழுது பாபாவிற்கு முன்னால் இருக்கின்றார்கள். உங்களுடைய இந்த சாகார வதனத்தில் இந்த சாதனங்கள் முன் பின் ஆக முடியும். ஆனால், இந்த ஆன்மிக தூரப்பார்வை, தொலைநோக்குப் பார்வை ஒருபோதும் கெட்டுப் போகாது. பாப்தாதாவிற்கு எதிரில் நாலாபுறங்களிலும் உள்ள சேவைகேந்திரங்களின் அனைத்து குழந்தைகளும் தெரிகின்றார்கள். நல்லது.

தீபாவளி கொண்டாடிவிட்டீர்களா? சங்கமயுகமே கொண்டாடுவதற்கான யுகம் ஆகும். உள்நோக்குமுகம் உடையவராகி அதீந்திரிய சுகத்தின் ஆனந்தத்தைக் கொண்டாடுங்கள். சேவையில் மகாதானி ஆகி ஆத்மாக்களுக்காக மகாதானம் கொடுத்துக் கொண்டே கொண்டாடுங்கள், தங்களுக்குள் ஆன்மிக உரையாடல் செய்யுங்கள், நடனம் ஆடுங்கள், சம்பந்தம் - தொடர்பில் ஒருவருக்கொருவர் விசேஷத்தன்மையைப் பாருங்கள், விசேஷத்தன்மையின் நறுமணத்தை எடுத்துக்கொள்ளுங்கள், சதா கொண்டாட்டமே கொண்டாட்டம் தான். இழக்கக் கூடிய நேரம் முடிந்துவிட்டது. இழக்கக்கூடிய யுகம் கிடையாது அல்லவா? இப்பொழுது கொண்டாடுவதற்கான மற்றும் வருமானம் செய்வதற்கான யுகம் ஆகும், சேமிப்பு செய்வதற் கான யுகம் ஆகும். பாப்தாதா சதா ஒவ்வொரு குழந்தையிடமும் இதையே பார்த்துக் கொண்டு இருக்கின்றார்கள் - கொண்டாடிக் கொண்டு இருக்கின்றார்கள். ஏதாவது ரூபத்தில் கொண்டாடத் தான் வேண்டும். ஏனெனில், சங்கமயுகத்தில் தான் இழப்பது மற்றும் கொண்டாடுவது ஆகிய இரண்டினுடைய ஞானம் இருக்கின்றது, எனவே, இழந்த பிறகு கொண்டாடுவது என்பதற்கான மகத்துவம் இருக்கின்றது. இப்பொழுது இழப்பது என்பதற்கு புள்ளி வைத்திடுங்கள். ஸ்டாப் (நிறுத்துங்கள்). இழக்கக் கூடாது. ஒரு நொடி கூட இழக்கக் கூடாது. வருமானம் செய்யக்கூடிய நேரத்தில் இழந்தால் எப்பொழுது வருமானம் செய்வீர்கள்? பிறகு, நேரம் கிடைக்காது. என்ன வெல்லாம் பொக்கிஷங்கள் உள்ளன என்று சோதனை செய்யுங்கள். அனைத்தையும் விட பெரிய பொக்கிஷம் எது? சங்கல்பம், சமயம், ஞானம் என்ற பொக்கிஷம் நடைமுறை வாழ்க்கையில் வரவேண்டும். ஞானம் சொல்வது மற்றும் கேட்பது, இது முதல் நிலை, ஆனால், ஞானம் என்றால் நாலெட்ஜ். ஞானத்தை என்ன சொல்கின்றீர்கள்? ஞானத்தை ஒளி என்றும், சக்தி என்றும் சொல்கின்றீர்கள் அல்லவா! எனவே, ஞானம் அதாவது நாலெட்ஜ் என்பதன் அர்த்தம் என்னவென்றால், சங்கல்பத்தில், வார்த்தையில், கர்மத்தில் ஒளி மற்றும் சக்தி இருப்பது என்பதாகும். இதைத் தான் நாலெட்ஜ்ஃபுல் கூற முடியும்.

குமாரிகள் ஞானம் நிறைந்தவர்களாக ஆகக்கூடியவர்கள் அல்லவா? கோர்ஸ் கொடுக்கக் கூடியவர்களாக மட்டும் ஆகக்கூடாது. சொற்பொழிவு ஆற்றுபவர்களாக மட்டும் ஆகக்கூடாது. கூடவே, ஞானத்தினுடைய ஒளி, சக்தியானது சங்கல்பம், வார்த்தை மற்றும் கர்மத்தில் இருக்க வேண்டும். குமாரிகள் மீது பாப்தாதாவிற்கு விசேஷமான அன்பு இருக்கிறது. ஏன்? தன்னுடைய வாழ்க்கையை தீர்மானித்துவிட்டீர்கள். தீர்மானித்துவிட்டீர்களா அல்லது தீர்மானிக்க வேண்டுமா? நல்ல முறையில் யோசித்துவிட்டீர்களா அல்லது அங்கே சென்று யோசிப்பீர்களா? பக்காவாக யோசித்துவிட்டீர்கள் என்றால் வாழ்த்துக்கள். பாருங்கள், இத்தனை கரங்கள் உங்களுக்கு தயாராகக்

கிடைப்பார்கள். எந்தக் குமாரிகள் டிரெயினிங் (பயிற்சி) எடுத்துக் கொண்டிருக்கின்றீர்களோ, அவர்கள் கை உயர்த்துங்கள். எத்தனை எண்ணிக்கை உள்ளனர்? (80) யார் இப்பொழுது சேவையில் ஈடுபடவில்லையோ, சென்டரை பரிபாலனை செய்யவி ல்லையோ, அவர்கள் கை உயர்த்துங்கள். எண்ணுங்கள், பாதி இருக்கிறார்கள். நல்லது. இத்தனை கரங்கள் கிடைத்துவிடுவார்கள் அல்லவா! வலது கரங்களா அல்லது இடது கரங்களா? வலது கரம் ஆகுவீர்கள் அல்லவா. நல்லது. குமாரிகளாக இருக்கிறார்கள் அல்லவா. பாப்தாதா குமாரி களுக்கு சென்டர் என்ற வீடும் கொடுக்கின்றார்கள் மேலும், வரனும் கிடைத்திருக்கின்றார். எப்பொழுதும் வீடு மற்றும் வரன் ஆகிய இரண்டும் வேண்டும். குமாரிகளுக்கு வரனும் கிடைத்துவிட்டார், இப்பொழுது வீடும் கிடைக்கும், சென்டர் கிடைக்கும். குமாரர்களுக்கும் கிடைக்கிறது. நாம் ஏன் பின்னால் இருக்கிறோம் என்று குமாரர்கள் நினைக்கின்றனர். பின்னால் கிடையாது, முன்னால் இருக்கின்றீர்கள். குமாரர்கள் இல்லாமல் சேவை எங்கே நடக்கிறது! எந்தவொரு சென்டரையும் பாருங்கள், ஒருவேளை, கடின உழைப்பு செய்யக்கூடிய குமாரர் இல்லையென்றால் சகோதரிகள் எதுவும் செய்ய முடியாது. இருவருமே தேவையாக இருக்கின்றீர்கள், எனவே, பாண்டவர்களுடைய பெயரும் இருக்கிறது. சக்திகளுடைய பெயரும் இருக்கிறது. இருவருடைய பெயரும் இருக்கிறது. நல்லது.

நிகழ்கால சமயத்தில் நீங்கள் ஒவ்வொருவரும், ஆத்மாக்களுக்காக இரக்க உள்ளம் மற்றும் வள்ளல் ஆகி ஏதாவது ஏதாவது கொடுத்துத்தான் ஆகவேண்டும், அது மனதின் சேவையின் மூலமாகக் கொடுங்கள், சுபமான பாவனையினால் கொடுங்கள், சிரேஷ்டமான சக்தி கொடுக்கும் விருத்தியினால் கொடுங்கள், ஆத்மிக சக்தி நிறைந்த வார்த்தையினால் கொடுங்கள் மற்றும் தனது அன்பு நிறைந்த சம்பந்தம் தொடர்பினால் கொடுங்கள், ஆனால், எந்தவொரு ஆத்மாவும் வஞ்சிக்கப்பட்டு விடக்கூடாது. வள்ளல் ஆகுங்கள், இரக்க உள்ளம் உடையவராகுங்கள். கூச்சலிட்டுக் கொண்டிருக்கின்றார்கள், பாப்தாதாவிற்கு முன்னே அவரவர் மொழிகளில் கதறிக் கொண்டு இருக்கின்றார்கள் - சாந்தி கொடுங்கள், அன்பு கொடுங்கள், உள்ளத்தின் அன்பு கொடுங் கள், சுகத்தின் கிரணங்களைக் காட்டுங்கள். தந்தை எப்படி கொடுப்பார்? குழந்தைகளாகிய உங்கள் மூலமாகத்தான் கொடுப்பார் அல்லவா! நீங்கள் அனைவரும் பாபாவிற்கு வலது கரங்கள். யாருக்கேனும் ஏதேனும் கொடுக்கவேண்டுமெனில் கரத்தின் மூலமாகத்தான் கொடுப்பார்கள் அல்லவா! ஆக நீங்கள் அனைவரும் தந்தையின் வலதுகரம் ஆவீர்கள் அல்லவா! பாண்டவர்கள் வலது கரங்களா? வலது கரங்களாகிய உங்களின் நினைவுச் சின்னம் இருக்கின்றது. நினைவுச் சின்னம் எதுவென்று தெரியுமா? விராட ரூப சித்திரத்தைப் பார்த்திருப்பீர்கள், அதில் எத்தனை கைகளைக் காட்டுகிறார்கள்? அது வலது கரங்களாகிய உங்களுடைய சித்திரம் அல்லவா! குமாரிகளே, அதில் உங்களின் சித்திரம் இருக்கின்றது தானே? எனவே இப்பொழுது தந்தை வலது கரங்கள் மூலம் ஆத்மாக்களுக்கு சுகம் சாந்தியை கை நிறைத்துக் கொடுப்பார்கள் அல்லவா! இரக்கத்திற்குரியவர்களுக்கு சிறிதளவு கூட கொடுக்கவில்லை என்றால் எவ்வளவு தவிப்பார் கள்! இப்பொழுது அனைவரும் எல்லைக்குட்பட்ட விசயங்களிலிருந்து உயரத்தில் செல்லுங்கள். எல்லைக்குட்பட்ட விசயங்களில், எல்லைக்குட்பட்ட சமஸ்காரங்களில் காலத்தை வீணடிக்கா தீர்கள். பாப்தாதா இன்றும் அனைத்து குழந்தைகளுக்கும்,

அவர்கள் இங்கு அமர்ந்திருக்கின்றார் களோ, சென்டரில் அமர்ந்திருக்கின்றார்களோ, உள்நாட்டில் இருக்கின்றார்களோ அல்லது வெளிநாட்டில் இருக்கின்றார்களோ, அனைவருக்கும் இரக்க பாவனையோடு சமிக்ஞை கொடுக் கின்றார்கள் - பாப்தாதா ஒவ்வொரு குழந்தைகளின் எல்லைக்குட்பட்ட விசயங்கள் மற்றும் எல்லைக்குட்பட்ட சுபாவ சமஸ்காரங்கள், குறும்புத்தனமான மற்றும் சாதுரியமான சமஸ்காரங் கள், சோம்பேறித்தனமான சமஸ்காரங்களை நீண்ட காலமாகப் பார்ததுக்கொண்டிருக் கின்றார்கள். சில குழந்தைகள், அனைத்தும் நடந்து கொண்டுதான் இருக்கின்றது! யார் பார்க் கின்றார்கள்? யார் அறிவார்கள்? என்று நினைக்கின்றனர், ஆனால், இப்பொழுது வரை பாப்தாதா இரக்க உள்ளமுடையவராக இருக்கின்றார்கள், ஆகவே, பார்த்தாலும், கேட்டாலும் கூட இரக்கப் பட்டுக்கொண்டு இருக்கின்றார்கள். ஆனால், பாப்தாதா இரக்க உள்ளம் இறுதியாக எது வரை காட்டுவது என்று கேட்கின்றார்கள்? எது வரை? இன்னும் கால அவகாசம் வேண்டுமா என்ன? தந்தையிடம் காலம் கூட இறுதியாக எதுவரை? எனக் கேட்கின்றது. இயற்கையும் கேட்கின்றது. பதில் நீங்கள் கூறுங்கள். பதில் கொடுங்கள். இப்பொழுது வரை தந்தை என்ற ரூபம் மட்டும் இருந்து கொண்டிருக்கின்றது, கூடவே, ஆசான் மற்றும் சத்குரு என்ற ரூபமும் உள்ளது. ஆனால், தந்தை என்ற சம்பந்தம் இருந்து கொண்டிருக்கின்றது. மன்னிப்புக்கடலின் பாகம் நடந்து கொண்டிருக்கிறது. ஆனால், தர்மராஜரின் பாகம் நடந்தால் என்னவாகும்? என்ன செய்வீர்கள்? தர்மராஜரின் பாகத்திலும் ஆஹா குழந்தைகளே ஆஹா என்ற ஒலி காதுகளில் ஒலிக்க வேண்டும் என்பதையே பாப்தாதா விரும்புகின்றார்கள். பிறகு, பாபாவிடம் புகார் கூறக் கூடாது. பாபா தாங்கள் கூறவில்லையே, நாங்கள் தயாராகி இருந்திருப்போம் அல்லவா! எனவே, இப்பொழுது எல்லைக்குட்பட்ட சின்னச்சின்ன விசயங்களில், சுபாவ சமஸ்காரங்களில் சமயத்தை வீணாடிக்காதீர்கள். போய்க்கொண்டிருக்கின்றேன், நடக்கிறது என்று கூட அல்ல, சேமிப்பு ஆகிக்கொண்டே உள்ளது. இரண்டு பங்கு, மூன்று பங்கு, நூறு பங்கு என்று சேமிப்பாகிக்கொண்டே உள்ளது, நடக்கிறது அல்ல. எனவே, இந்த திடசங்கல்பத்தின் தீபத்தை உள்ளத்தில் ஏற்றுங்கள். எல்லைக்குட்பட்டதில் இருந்து எல்லையற்ற விருத்தி. பார்வை மற்றும் செயலை உருவாக்கியே தீரவேண்டும். எனவே, பாப்தாதா உருவாக்கியே ஆகவேண்டும் எனக் கூறுகின்றார்கள். உருவாக்கியே ஆகவேண்டும் என்பதை இன்று கூறிக்கொண்டு இருக் கின்றார்கள், பிறகு என்ன கூறுவார்கள்? டூ லேட் (மிகவும் கால தாமதம் ஆகிவிட்டது). காலத்தைப் பாருங்கள், சேவையைப் பாருங்கள், சேவை அதிகரித்துக்கொண்டே உள்ளது, சமயம் ஒடிக்கொண்டிருக்கின்றது. ஆனால், சுயம் எல்லைக்குட்பட்டதில் இருக்கின்றீர்களா அல்லது எல்லையற்ற நிலையில் இருக்கின்றீர்களா? எல்லைக்குட்பட்ட விசயங்களுக்குப் பின்னே நீங்கள் ஓடாதீர்கள். அப்பொழுது எல்லையற்ற விருத்தி, சுவமானத்தின் ஸ்திதி உங்கள் பின்னே ஓடிவரும்.

பாப்தாதா இந்த வருடத்தில் யாரெல்லாம் இந்த சமயம் வரை செய்தார்கள், அதில் திருப்தியுடன் இருக்கின்றார்கள் பரிசும் கொடுக்கின்றார்கள். ஆனால், இப்பொழுது சேவையில் அனுபவத்தை செய்விக்க வேண்டும், ஒளியில் பலியாகும் விட்டில்பூச்சிகளை உருவாக்க வேண்டும். சகயோகி ஆக்குங்கள் அல்லது துணைவனாக ஆக்குங்கள், ஏதாவது ஆகவேண்டும். அனுபவத்தின்

சுரங்கத்தை திறந்திடுங்கள். நன்றாக உள்ளது, இதுவரை சரியாக இருக்கின்றது. ஆனால், தீபத்தை மட்டும் சுற்றிவிட்டு பறந்து விடக்கூடிய விட்டில்பூச்சியாக ஆகக்கூடாது. அனுபவத்தின் பாடத்தை எடுப்பதால் உறுதியான விட்டில்பூச்சி ஆகுவார்கள். மிகவும் நன்றாக உள்ளது, சொர்க்கமாக இருக்கிறது என்ற இந்தளவு அனுபவம் செய்கின்றார்கள். இதுவே யதார்த்தமான ஞானம் ஆகும், நாலெட்ஜ் ஆகும், இந்தளவு சேவைக்கான ரிசல்ட் நன்றாக உள்ளது. இப்பொழுது அனுபவ சொரூபம் ஆகி அனுபவம் செய்வித்திடுங்கள். அனுபவம் செய்யக்கூடியவர்கள் என்றால் தந்தையிடம் நேரடியாக சம்பந்தம் வைப்பவர்கள் என்று அர்த்தம். அப்படிப்பட்ட அனுபவி விட்டில்பூச்சிகளை தயார் செய்யுங்கள். சகயோகி ஆக்கியிருக் கின்றீர்கள், அதற்கான வாழ்த்துக்கள், இன்னும் ஆக்குங்கள். இதுவே இடம் ஆகும், இங்கிருந்தே பிராப்தியைப் பெற முடியும், இந்தளவு வரை ஏற்றுக் கொண்டிருக்கின்றார்கள், ஆனால், ஒளிக்குப் பின்னாலேயே பறந்து கொண்டே இருக்குமளவு தந்தையுடன் சிறிதளவாவது சம்பந்தத்தை இணைத்துவிடுங்கள். எனவே, இந்த வருடம் விசேஷமாக பாப்தாதா சேவையில் அனுபவம் செய்விக்கும் பாடத்தை நீங்கள் பிறருக்கு எடுக்க வேண்டும் என்று விரும்புகின்றார்கள். இதன் மூலமே காட்சியும் கிடைக்கும் மற்றும் சாட்சாத் தந்தை பிரத்யட்சம் ஆகுவார். என்ன செய்ய வேண்டும் என்பதைக் கேட்டீர்களா? திட்டம் கிடைத்துவிட்டதா? இப்பொழுது இந்த வருடத்தின் ரிசல்ட்டைப் பார்ப்பார்கள்.

நாலாபுறங்களிலும் உள்ள மிகவும் அன்பான பாப்தாதாவின் இதய சிம்மாசனதாரி சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு, சதா எல்லைக்குட்பட்ட சுபாவம், சமஸ்காரத்தை மாற்றம் செய்யக்கூடிய எல்லையற்ற மாற்றம் கொண்டு வரும் ஆத்மாக்களுக்கு, சதா ஒரு நொடி, ஒரு சங்கல்பம் கூட வீணாக இழக்காத, சேமிப்பு செய்யக்கூடிய தீவிர முயற்சியாளர் குழந்தைகளுக்கு, சதா கருணை உள்ளம் உடையவராகி, வள்ளலாகி ஒவ்வொரு ஆத்மாவிற்கு, அது பிராமண ஆத்மாவோ, தாகமான ஆத்மாவோ, அவர்களுக்கு ஏதாவது உள்ளங்கை நிறைத்து கொடுக்கக் கூடிய, சகாஷ் வழங்கக்கூடிய, அப்பேற்பட்ட பரந்த உள்ளம் கொண்டிருக்கக்கூடிய குழந்தைகளுக்கு பாப்தாதாவின் மிக, மிக, மிக, மிக அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

வரதானம் : ஊக்கம் உற்சாகத்தினால் உலக நன்மையின் பொறுப்பை நிறைவேற்றுபவராகி அலட்சியம் மற்றும் கவனக்குறைவில் இருந்து விடுபட்டவர் ஆகுக.

புதியவர்களோ அல்லது பழையவர்களோ, பிராமணன் ஆகுவது என்றால் உலக நன்மை யின் பொறுப்பை எடுத்துக் கொள்வதாகும். எப்பொழுது எந்தவொரு பொறுப்பு கிடைக்கும் பொழுதும் தீவிர வேகத்தில் பூர்த்தி செய்கின்றனர், பொறுப்பு இல்லை என்றால் கவனக் குறைவாக இருக்கின்றார்கள். பொறுப்பானது அலட்சியம் மற்றும் கவனக்குறைவை முடிவடையச் செய்துவிடுகிறது. ஊக்கம் உற்சாகம் உடையவர்கள் களைப்பற்றவராக இருக் கின்றார்கள். அவர்கள் தன்னுடைய முகம் மற்றும் நடத்தையின் மூலம் பிறருடைய ஊக்க உற்சாகத்தையும் அதிகரித்துக் கொண்டே இருப்பார்கள்.

சுலோகன்: சமயத்தின் அனுசாரம் சக்திகளை பயன்படுத்துவது என்றால் ஞானம் மற்றும் யோக சொரூப ஆத்மாவாக ஆவதாகும்.

குறிப்பு: இன்று நம் அனைவருடைய உயிரினும் அன்பான தாதி பிரகாஷ்மணி அவர்களுடைய புண்ணிய நினைவு நாளாகும். எவ்வாறு தாதி அவர்கள் ஒவ்வொரு காரியத்தில் உண்மை யானவர் ஆகி, உண்மையான உள்ளத்தின் மூலம் உண்மையான தலைவனை திருப்திப்படுத்தி இதய சிம்மாசனதாரி ஆனார்கள். அவ்வாறே நாமும் கூட தாதி அவர்களுக்கு சமமாக ஆக வேண்டும், இதுவே அவர்களுக்கு செய்யும் அன்பு நிறைந்த சிரத்தாஞ்சலி ஆகும்.